No. of Printed Pages : **11**

MARCH 2023

**6752**

**A**

பதிவு எண்
Register Number

**PART - III**

# வணிகவியல் / COMMERCE

YOUTUBE / AKWA ACADEMY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART – I

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

This PDF document was edited with Icecream PDF Editor.
Upgrade to PRO to remove watermark.

**1.** இந்து கூட்டுக் குடும்பத் தொழில் உறுப்பினர்கள் _________ என்று அழைக்கப்படுவர்.

(அ) தலைமுறை (ஆ) கர்த்தா

(இ) கூட்டாளிகள் (ஈ) கூட்டு வாரிசுதாரர்

The members in the Hindu undivided family are called _________.

(a) Generations (b) Karta

(c) Partners (d) Coparceners

**2.** நிறுமத்தின் இயக்குநர் _________ ஆல் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

(அ) கடனீட்டு பத்திரதாரர் (ஆ) கடனீந்தோர்

(இ) பங்குதாரர் (ஈ) கடனாளர்

The Board of Directors of a Company is elected by _________.

(a) Debenture holders (b) Creditors

(c) Shareholders (members) (d) Debtors

**3.** உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் _________.

(அ) சில்லறை வியாபாரி (ஆ) பண்டகக் காப்பாளர்

(இ) நுகர்வோர் (ஈ) மொத்த வியாபாரி

_________ buys the goods from the producer and sells it to the retailers.

(a) Retailer (b) Warehouse-keeper

(c) Consumer (d) Wholesaler

**4.** வியாபாரம் மற்றும் வணிகம் _________ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.

(அ) பாண்டியர் (ஆ) பல்லவர் (இ) சேரர் (ஈ) சோழர்

Trade and Commerce was common during _________ Dynasty.

(a) Pandiya (b) Pallava (c) Chera (d) Chola

**5.** முதல் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு :

(அ) 1872 (ஆ) 1922 (இ) 1932 (ஈ) 1844

The first Co-operative Society was started in _________.

(a) 1872 (b) 1922 (c) 1932 (d) 1844



This PDF document was edited with Icecream PDF Editor. Upgrade to PRO to remove watermark.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**6.** அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம் :

(அ) வைப்பு இரசீது (ஆ) உரிமை இரசீது

(இ) உரிமை சான்றிதழ் (ஈ) இவை எதுவும் இல்லை

An instrument representing ownership interest in securities of foreign issuer is called ________.

(a) A depository receipt (b) An ownership receipt

(c) An ownership certificate (d) None of the above

**7.** சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு, மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ________ எனப்படும்.

(அ) மறு ஏற்றுமதி வியாபாரம் (ஆ) இறக்குமதி வியாபாரம்

(இ) பன்னாட்டு வியாபாரம் (ஈ) ஏற்றுமதி வியாபாரம்

Goods imported for the purpose of re-export to another country is termed as :

(a) Entrepot Trade (b) Import Trade

(c) International Trade (d) Export Trade

**8.** தொழிலின் முதன்மைக் குறிக்கோள் ________.

(அ) இலாபம் ஈட்டாமல் இருத்தல் (ஆ) சிறப்புத் தேர்ச்சி

(இ) இலாபம் ஈட்டுதல் (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

The primary objective of a business is ________.

(a) Not making profit (b) Special skill

(c) Making profit (d) None of the above

**9.** பொருந்தாத இணையைக் கண்டறிக.

(அ) C 2 B - மான்ஸ்டர் டாட்.காம்

(ஆ) B 2 B - ப்ளிப்கார்ட்

(இ) B 2 G - அலிபாபா

(ஈ) C 2 C - ஓ எல் எக்ஸ்

Find out mismatched pair.

(a) C 2 B - Monster.com

(b) B 2 B - Flipkart

(c) B 2 G - Alibaba

(d) C 2 C - OLX



This PDF document was edited with Icecream PDF Editor.
Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**10.** கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான _________ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.

(அ) இலாபம் (ஆ) வட்டி

(இ) பங்காதாயம் (ஈ) இவை எதுவும் இல்லை

Debenture holders are entitled to a fixed rate of _________.

(a) Profits (b) Interest

(c) Dividend (d) None of the above

**11.** உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் :

(அ) ஜெனிவா (ஆ) நியூயார்க் (இ) பிரேசில் (ஈ) இலண்டன்

The Headquarters of World Trade Organisation is located at :

(a) Geneva (b) New York (c) Brazil (d) London

**12.** இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, _________ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.

(அ) 1934 (ஆ) 1936 (இ) 1933 (ஈ) 1935

The Reserve Bank of India commenced its operations from April 1 of _________.

(a) 1934 (b) 1936 (c) 1933 (d) 1935

**13.** சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை :

(அ) ஒப்புக் கொண்ட வாக்குறுதி (ஆ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு

(இ) ஒப்பந்தம் (ஈ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு

An agreement enforceable by Law is a _______.

(a) Approved promise (b) Enforceable acceptance

(c) Contract (d) Accepted offer

**14.** போக்குவரத்து _________ தடையை நீக்குகிறது.

(அ) ஆள்சார் (ஆ) நேரம் (இ) அறிவு (ஈ) இடம்

Transport removes the _________ hindrance.

(a) Person (b) Time (c) Knowledge (d) Place



www.Padasalai.Net AKWA ACADEMY
This PDF document was edited with Icecream PDF Editor. Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**15.** வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு என்பது :

(அ) ஒளி ஆண்டு (ஆ) கணக்கீட்டு ஆண்டு

(இ) நாட்காட்டி ஆண்டு (ஈ) முந்தைய ஆண்டு

The year in which income is earned is known as ________.

(a) Light year (b) Assessment year

(c) Calendar year (d) Previous year

**16.** தொழில் அமைப்புகளின் வடிவங்களில் மிகவும் பழமையானது :

(அ) கூட்டுறவுச் சங்கம் (ஆ) தனியாள் வணிகம்

(இ) நிறுமம் (ஈ) கூட்டாண்மை

The oldest form of Business organisation is ________.

(a) Co-operative society (b) Sole Proprietorship

(c) Company (d) Partnership

**17.** உற்பத்தி துறையின் கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்ச வரம்பு __________ லட்சத்திற்கு மிகக்கூடாது.

(அ) 25 (ஆ) 10 (இ) 50 (ஈ) 20

Investment Limit of a Micro Enterprise under Manufacturing sector does not exceed _________ Lakhs.

(a) 25 (b) 10 (c) 50 (d) 20

**18.** வணிக வங்கிகளின் முதன்மை பணிகளில் அடங்காதது :

(அ) நிதி பரிமாற்றம்

(ஆ) வைப்புகளை ஏற்றல்

(இ) கடனை உருவாக்குதல்

(ஈ) கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்

The primary functions of a Commercial Bank does not include _________.

(a) Transfer of Funds

(b) Accepting Deposits

(c) Creation of Credit

(d) Granting loans and advances



www.Padasalai.Net
AKWA ACADEMY
This PDF document was edited with Icecream PDF Editor
Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**19.** ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை :

(அ) பெறுதல் செலுத்தல் அறிக்கை

(ஆ) செலுத்தல் சமநிலை

(இ) கணக்கியல் அறிக்கை

(ஈ) வாணிப சமநிலை

The statement which discloses a record of transactions between the residents of one country and residents of foreign country :

(a) Statement of Receipts and Payments

(b) Balance of Payment

(c) Accounting Statement

(d) Balance of Trade

**20.** உள்நாட்டு வியாபாரத்தை __________ வகைகளாக பிரிக்கலாம்.

(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) ஐந்து (ஈ) நான்கு

Internal Trade can be classified into _________ categories.

(a) Two (b) Three (c) Five (d) Four

## பகுதி - II / PART – II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **Compulsory**.

**21.** நாளங்காடி என்றால் என்ன ?

What is meant by Nallangadi ?

**A**

This PDF document was edited with Icecream PDF Editor. Upgrade to PRO to remove watermark.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**22.** தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார் ?

Who is called a Sole Trader ?

**23.** பண்டக காப்பகங்களின் வகைகள் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.

List any four types of warehouses.

**24.** தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன ?

What is meant by Business Process Outsourcing (BPO) ?

**25.** பெருநிறுவன ஆளுகை – வரைவிலக்கணம் தருக.

Define Corporate Governance.

**26.** குறு நிறுவனங்களுக்கு ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

Give any two examples of Micro enterprises.

**27.** இடைநிலையர் என்பவர் யார் ?

Who is a Middleman ?

**28.** உலக வர்த்தக அமைப்பு (WTO) என்றால் என்ன ?

What is World Trade Organisation (WTO) ?

**29.** வருமான வரி என்றால் என்ன ?

What is Income Tax ?



This PDF document was edited with Icecream PDF Editor.
Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**30.** S என்பவர் தன்னுடைய மகிழ்வுந்தை ₹ 5,00,000 -க்கு T என்பவருக்கு விற்பனை செய்ய ஒப்புக்கொள்கிறார். அதேபோல T என்பவரும் மகிழ்வுந்தை வாங்க ஒப்புக்கொள்கிறார். இது எத்தகைய ஒப்பந்தம் ? விளக்குக.

'S' offers to sell his car for ₹ 5,00,000 to 'T'. 'T' agrees to buy it. Mention the type of contract and explain.

## பகுதி - III / PART – III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **Compulsory**.

**31.** மனித செயல்பாடுகள் என்றால் என்ன ? விளக்குக.

What do you mean by human activities ? Explain.

**32.** இந்து கூட்டு குடும்ப தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரிக்கவும்.

Explain any three characteristics of Hindu Undivided Family (HUF).

**33.** இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார் ?

Who are the persons involved in RBI Administration ?

**34.** கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன ?

What is Charter Party ?

**35.** சமூகப் பொறுப்புணர்வின் வகைகள் எவையேனும் மூன்றினை பட்டியலிடுக.

List out any three kinds of social responsibilities.



This PDF document was edited with Icecream PDF Editor. Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**36.** கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் ஆதாரங்களின் வகைகளைக் குறிப்பிடுக.

Classify the sources of Business Finance on the basis of Period.

**37.** இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்களுக்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

Give three examples of India's important Import and Export items.

**38.** இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள் யாவை ?

What are the kinds of reciprocal promise ?

**39.** சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை ? (ஏதேனும் 3)

What are the objectives of Goods and Service Tax (GST) ? (Any 3)

**40.** சிறு குறிப்பு வரைக :-

(i) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள்

(ii) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள்

Write short notes on :

(i) Document against Payment (D/P)

(ii) Document against Acceptance (D/A)

## பகுதி - IV / PART – IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) உற்பத்தி தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க.

அல்லது

(ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை ?

(a) Compare Industry, Commerce and Trade.

**OR**

(b) What are the contents of Memorandum of Association ?



This PDF document was edited with **Icecream PDF Editor**.
**Upgrade to PRO** to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**42.** (அ) பொது கழகத்தின் ஏதேனும் மூன்று நிறைகள் மற்றும் மூன்று குறைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் யாவை ?

(a) Explain any three advantages and three disadvantages of Public Corporations.

**OR**

(b) What are the Institutional sources of finance for Micro, Small and Medium Enterprises (MSMEs) ?

**43.** (அ) பல்வேறு வகையான வங்கிகளை செயல்பாடுகளின் அடிப்படையில் விவரிக்கவும். (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) வருமான வரியின் அடிப்படை கருத்துக்கள் எவையேனும் ஐந்தினை விளக்கி எழுதுக.

(a) Explain the various types of banks based on the functions. (Any 5)

**OR**

(b) Elucidate any five basic concepts of Income Tax.

**44.** (அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

**அல்லது**

(ஆ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும்.

(a) What are the differences between Contract and Agreement ?

**OR**

(b) Explain the different key elements of Business Ethics.

**45.** (அ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) பணிகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 5)

(a) Explain different types of transport. (Any 5)

**OR**

(b) Write down the functions of International Monetary Fund (IMF). (Any 5)

A

This PDF document was edited with Icecream PDF Editor.
Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**46.** (அ) உலகளாவிய வைப்பு இரசீதையும் அமெரிக்க வைப்பு இரசீதையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 5)

(a) Distinguish between GDR and ADR. (Any 5)

**OR**

(b) Explain the different types of Retailers. (Any 5)

**47.** (அ) வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

(a) Explain the different types of Foreign Trade.

**OR**

(b) Explain any five special features of Balance of Payments.

- o 0 o -

www.Padasalai.Net
AKWA ACADEMY



This PDF document was edited with Icecream PDF Editor.
Upgrade to PRO to remove watermark.
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
AKWA ACADEMY

This PDF document was edited with **Icecream PDF Editor**.
**Upgrade to PRO** to remove watermark.